**வேளாண்மை - உழவர் நலத்துறை**
**சிவகங்கை மாவட்டம்**

# உழவர் இதழ்

**அக்டோபர்-2021**





மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கப்பட்டது



"உழவர் உதவி மையம்"



மீன் வளர்ப்பில் இரட்டிப்பு வருமானம் பெறலாம்

**மாவட்ட ஆட்சியர்/ பெருந்தலைவர் (அட்மா திட்டம்),**
**சிவகங்கை மாவட்டம்**

**வேளாண்மை - உழவர் நலத்துறை**
**சிவகங்கை மாவட்டம்**

# உழவர் இதழ்

அக்டோபர்-2021

மாவட்ட ஆட்சியர்/பெருந்தலைவர்(அட்மா திட்டம்)
சிவகங்கை மாவட்டம்

ப.மதுசூதன் ரெட்டி இ.ஆ.ப,
மாவட்ட ஆட்சியர்,
சிவகங்கை

## அணிந்துரை

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் அனைவருக்கும் வணக்கம்,

தமிழகத்தில் வேளாண் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியினை அதிகரித்து அதன் மூலம் விவசாயிகள் அதிக வருமானம் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் வேளண்மைத்துறை மற்றும் அனைத்து துறைகள் மூலம் பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த உன்னத நோக்கத்தினை செயல்படுத்த ஒவ்வொரு மாதமும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மற்றும் சகோதரத்துறைகள் சார்பில் வெற்றி விவசாயிகளின் வெற்றிக்கதைகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் எளிதான முறையில் சிவகங்கை மாவட்ட விவசாயிகளை சென்றடைய வேளாண் துறையின் " அட்மா" திட்டம் மூலம் இந்த மாத உழவர் இதழ் வழங்கப்படுகிறது. இந்த தொழில்நுட்ப செய்திகள் மற்றும் வெற்றிக்கதைகளின் அடிப்படையில் இவற்றை முன்னுதாரணமாக பயன்படுத்தி சிவகங்கை மாவட்ட விவசாயிகள் அனைவரும் வேளாண் தொழிலில் அதிக இலாபம் ஈட்டிட எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சியர்/பெருந்தலைவர்,
"அட்மா" திட்டம்
சிவகங்கை மாவட்டம்

# கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம்

ஐந்து ஆண்டுகளில் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து கிராமங்களிலும் ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சியினை உருவாக்கிட அனைத்து துறைகளின் ஒருங்கிணைப்புடன் இப்பெரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வட்டார அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் வேளாண் துறை, தோட்டக்கலைதுறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, கால்நடைபராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, நீர்வள ஆதாரத்துறை, எரிசக்தி துறை, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்துறை உள்ளிட்ட துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்து கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்பட்டு அனைத்து கிராமங்களும் ஒட்டுமொத்த வளர்ச்சி அடைந்து தன்னிறைவு பெற்ற கிராமங்களாக மாற்றப்படும்.

சிவகஙகை மாவட்டத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் 5பஞ்சாயத்துக்கள் வீதம் 60பஞ்சாயத்துகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இப்பஞ்சாயத்துகளில் தரிசு நில தொகுப்பாக 117 எண்கள் (1059 ஹெ) தேர்வு செய்யப்பட்டுள்ளது.

அனைத்து துறைகள் தொடர்பான அடிப்படை புள்ளி விவரங்கள்(DPR) சேகரிக்கப்பட்டு விரிவான செயல்திட்டம் தயாரிக்கப்பட்டுவருகிறது.

**திட்டத்தின் நோக்கங்கள்:**

1. கிராமத்தில் உள்ள தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டுவருதல்
2. நீர் வள ஆதாரங்களை பெருக்குதல்
3. சூரிய சக்தி பம்புசெட்டுகள் அமைத்தல்
4. வேளாண் விளைபொருட்களை மதிப்பு கூட்டி சந்தைபடுத்துதல்
5. நுண்ணீர் பாசன முறையை பின்பற்றுதல்
6. கால்நடைகளின் நலன் காத்து பால் உற்பத்தியை பெருக்குதல்
7. வருவாய் துறையின் மூலம் புதிய பட்டா/பட்டா மாறுதல் வழங்குதல்
8. கூட்டுறவு சங்கங்களின் மூலம் அதிகளவு பயிர் கடன்கள் வழங்குதல்
9. கால்வாய் பாசன நீர் வழித்தடங்களை தூர் வாருதல்

# உழவர் உதவி மையம் - வேப்பங்குளம், கல்லல் வட்டாரம்



சிவகங்கை மாவட்டத்தில் வேளாண் மற்றும் அனைத்து துறை திட்டங்கள் தொடர்பான விவரங்களை விவசாயிகளுக்கு தெரியப்படுத்திட நவீன தொழில்நுட்பத்துடன் பயன்பெறும் வகையில் மாவட்ட ஆட்சியர், சிவகங்கை அவர்களால் 23.9.2021 அன்று கல்லல் வட்டாரத்தில் உள்ள வேப்பங்குளம் கிராமத்தில் புதிதாக "உழவர் உதவி மையம்" தொடங்கிவைக்கப்பட்டது.

**நடைபெற்று வரும் ஆரம்பக்கட்ட பணிகள்**

1. வேப்பங்குளம் மற்றும் அதன் சுற்று வட்டார விவசாயிகளின் சாகுபடி விபரம் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது.
2. சேகரிக்கப்பட்ட தகவல்கள் கணினியில் பதிவேற்றம் செய்யும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது.
3. மண் மற்றும் நீர்மாதிரி ஆய்வு செய்வதற்கு எடுத்து அனுப்பப்படுகிறது
4. விளைபொருட்களின் விலை மற்றும் சந்தை நிலவரங்கள் சேகரிப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**விவசாயிகள் பெறவிருக்கும் சேவைகள்**:

*1* அரசு மானியம் மற்றும் திட்டங்கள் குறித்து விவசாயிகள் நன்கு புரிந்து கொள்ளுதல்.

*2* தங்கள் விளைநிலத்திற்கு உகந்த பயிர் மற்றும் ரகத்தை தேர்வுசெய்தல். தினசரி விவசாயிகள் பயிர் செய்யும் பரப்பு பதிவுசெய்யப்படுவதால், இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்படும்போது தேவைக்கேற்ற உற்பத்தி என்கிற வகையில் பயிரை தேர்வு செய்ய வழிவகுக்கும் மிகமுக்கியமான சேவை சாத்தியமாகும்.

*3* சிறு , குறு விவசாயிகளும் தங்களுக்கு தேவையான இடுபொருள்களை விற்பனை செய்யும் நிறுவன தயாரிப்புகளை ஒப்பிட்டு பார்த்து, தரமானவற்றை ஆர்டர் செய்து கிராமத்திலேயே பெற்றுக்கொள்ள முடியும்

*4* நமது பகுதி சாந்த வானிலை அறிக்கையின்படி விவசாயிகள் செயல்பட முடியும்

*5* சீசன் நேரங்களில் ஏற்படும் விவசாய வேலை ஆட்கள் மற்றும் விவசாய எந்திரங்கள்/ உபகரணங்களை அருகில் இருக்கும் பகுதிகளில் இருந்து ஏற்பாடு செய்துகொள்ள முடியும்

*6* தங்கள் நிலத்தில் அதிகபட்ச விளைச்சல் மற்றும் தரம் தொடர்பான தகவல்களை பெற முடியும். மண் பரிசோதனை செய்துஇருக்கும் பட்சத்தில் இதன் துல்லிய தன்மை அதிகஅளவில் இருக்கும்

*7* அங்கீகரிக்கக்கப்பட்ட நிதிநிறுவனங்களை எளிதில் தொடர்புகொள்ள வழிவகுக்கும்

*8* பயிர்களுக்கான நோய்/ பூச்சி தாக்கம் தொடர்பான முன்னறிவிப்புகள் , முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் , பிரச்சினையை கண்டறிதல் , பரிந்துரைகள், பயன்படுத்தும் முறை போன்றவற்றை உரிய நேரத்தில், உரிய முறைகள் செய்து பயிரை பாதுக்காக்கும் தீர்வு

*9* தங்கள் கிராமத்தில் உற்பத்தியாகும் விளைபொருள்கள் விலை பற்றிய தகவலை தொடர்ந்து கவனித்தல் மற்றும் உகந்த சந்தையை தேர்வு செய்யும் வாய்ப்பு

*10* பயிர்செய்ய ஆரம்பிக்கும்போதே சந்தைப்படுத்தலுக்கான பணிதொடங்குகிறது. பெரிய அளவில் விளைபொருளை வாங்குபவர்கள் தங்களுக்கு தேவையான வற்றை வாங்குவதை முன்கூட்டியே திட்டமிட்டு, தங்களுக்கு தேவையான ரகம் , தரம் மற்றும் விலையை தெரிவிக்கலாம். அறுவடை நேரங்களில் இந்த மையங்கள் விவசாயி*களுடன்* - வர்த்தகர்களை இணைக்கும் முக்கிய சேவையை வழங்கும். விவசாயிகளின் விளைபொருள்கைகளை சேகரித்து வர்த்தகர்களுக்கு அனுப்பிவைக்கும் பணியின் மூலம் சிறு . குறு விவசாயிகளும் தங்கள் சிறிய அளவிலான உற்பத்தியை நல்ல விலைக்கு விற்கும் வாய்ப்பு உருவாகும். மேலும் . இத்திட்டம் பெரிய அளவில் விரிவாக்கம் செய்யப்படும்போதுஒரு பயிர் பயிரிடப்பட்ட மொத்த பரப்பளவு இதுவரை அறுவடை செய்யப்பட்ட பரப்பளவு அறுவடை செய்யப்படவிருக்கும் பரப்பளவு (பகுதிவாரியாக) விவசாயிகளுக்கு தெரியப்படுத்துவதால். தங்கள் விளைபொருளை தற்போதைய விலைக்கு விற்பதால் சிறிது காலம் தங்கள் இடத்திலோ/ சேமித்து வைக்கும் கிட்டங்கிகள் அமைப்புகளிலோ பாதுகாத்து வைத்து நல்ல விலை வரும்போது விற்ப *னை செய்யும்* வாய்ப்பை பெறுவார்கள்.






கால்நடை சுயதொழில் போன்ற மாற்று வருமான வழிகளுக்கு தேவையான சேவைகளும் இந்த மையத்தில் கிடைக்கும்.

தொடர்புக்கு:
திரு. திருசெல்வம்,
ஒருங்கிணைப்பாளர்,
உழவர் உதவி மையம், வேப்பங்குளம்,
கல்லல் வட்டாரம்
செல்:9840374266

## கொப்பரை தேங்காய் மறைமுக ஏலம் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம்.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பாக சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் மறைமுக ஏலம் மூலம் தேங்காய் கொப்பரை விற்பனை நடைபெற்று வருகிறது. இதன் மூலம் பயனடைந்த விவசாயி திரு.சோ.ரா.கண்ணன்(அலைபேசி எண்.87783 36167) என்பவர் கூறியதாவது.

நான் திருப்புவனம் வட்டம், மடப்புரம் கிராமத்தில் சுமார் 25 ஏக்கர் பரப்பளவில் தென்னை விவசாயம் செய்து வருகிறேன். அறுவடை செய்த கொப்பரை தேங்காய்களை திருப்புவனத்தில் உள்ள எண்ணெய் அரவை செக்கு மில்களில் கிலோ ஒன்றுக்கு ரூ.60-70க்கும் சில சமயங்களில் அதற்கும் குறைவாகவும் விற்பனை செய்து வந்தேன். அப்பொழுது திருப்புவனம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் கொப்பரைக்கு மறைமுக ஏலம் நடைபெறுகிறது என செய்தித்தாள் விளம்பரம் மூலம் அறிந்து விற்பனைக்கூட அலுவலகத்தினை தொடர்பு கொண்டு விவரம் கோரிய பொழுது கொப்பரையினை தரம்பிரித்து மறைமுக ஏலத்தில் விற்று பயனடையுமாறு தெரிவிக்கப்பட்டது.

அதன்படி கொப்பரை தேங்காய்களை தரம்பிரித்து அடுத்து நடைபெற்ற மறைமுக ஏலத்தில் கலந்து கொண்டு முதல் தரத்திற்கு கிலோ ஒன்று ரூ.105/-க்கும், சுமாரான தரத்திற்கு கிலோ ஒன்று ரூ.80க்கும் விற்று சுமார் ரூ.9,440/- வரையில் கூடுதல் இலாபம் பெற்று பயனடைந்தேன். கொப்பரைகளுக்கான முழு கிரையத் தொகையையும் வியாபாரிகளிடமிருந்து உடனடியாக பெற்று வழங்கப்பட்டது. இந்த ஏலத்தில் எவ்வித கமிஷனோ, தரகோ வசூலிக்கப்படவில்லை. மறைமுக ஏலத்தில் உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் பலர் கலந்து கொள்வதால் தரமான கொப்பரை தேங்காய்களுக்கு போட்டி விலை கோரப்பட்டு விவசாயிகளுக்கு கூடுதல் இலாபம் கிடைக்கிறது.

மேலும், முதல் தரத்திலான கொப்பரைகளுக்கு இந்த ஏலத்தில் போதுமான விலை கிடைக்காதபட்சத்தில் அரசின் விலை ஆதரவு திட்டத்தின் கீழ் குறைந்தபட்ச ஆதார விலையில் அரசே நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுவதும் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இதனை அனைத்து தென்னை விவசாயிகளும்

**பயன்படுத்திக் கொள்ளலாம். விவசாயிகள் பயன்பெற 95666 55382 என்ற எண்ணில் திருப்புவனம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட மேற்பார்வையாளாரை தொடர்பு கொள்ளவும்.**



---

## தோட்டக்கலைத்துறை - பப்பாளியில் மகசூல்

எனக்கு இது மிகவும் புதிய பயிராக இருந்தது. ஆம், 2வருடத்திற்கு முன்பு காய்கறி மட்டுமே பயிரிட்டு வந்தேன். இப்பொழுது பப்பாளி மரக்கன்று நடவுசெய்து ஊடுபயிராக காய்கறி நாற்றுகள் வைத்து இன்று இலாபகரமான விவசாயியாக உள்ளேன். நான் சின்னக்காளை(செல்:7502060209), கானப்பட்டியை சேர்ந்தவன். எனது கிராமம் எஸ்.புதூர் வட்டாரத்தில் உள்ளது.

நான் கத்தரி, வெண்டை போன்ற காய்கறி பயிர்களை மட்டுமே முதலில் விவசாயம் செய்து வந்தேன். இதன் மூலம் எனக்கு குறைந்த வருமானமே கிடைத்து வந்தது. ஒரு வருடத்திற்கு முன்பு தோட்டக்கலை துறையில் உள்ள அலுவலர்கள் என்னைத் தொடர்பு கொண்டு காய்கறி பயிரினை மட்டும் விவசாயம் செய்யாமல் முதன்மை பயிராக பப்பாளி நடவுசெய்து ஊடுபயிராக காய்கறியினை நடவு செய்யுமாறும், அவ்வாறு செய்வதன் மூலம் பப்பாளி மற்றும் காய்கறி இரண்டு பயிர்களின் மூலம் இரடிப்பு வருமானம் ஈட்டலாம் என ஆலோசனை வழங்கினார்கள்.

என்னிடம் இருந்த 1 ஏக்கரில் பப்பாளி கன்றுகளை ஆவணி மாதம் நடவுசெய்தேன். தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் மூலம் பப்பாளி நாற்றுக்கள் வழங்கப்பட்டது. அதனை 7 அடி இடைவெளியில் நடவு செய்தேன். கார்த்திகை மாதம் மிளகாய் நாற்றுக்களை ஊடுபயிராக 2 ½அடி இடைவெளியில் பயிரிட்டேன். நீர்பாசனத்திற்கு சொட்டுநீர் குழாய்களை பிரதம மந்திரி நுண்ணீர் பாசனத்திட்டத்தின் மூலம் தோட்டக்கலை துறையினர் அமைத்து கொடுத்தனர். எந்த மாதத்தில் மண் அணைப்பது, உரம் இடுவது, களை எடுப்பது போன்ற அனைத்து தொழிற்நுட்ப அறிவுரைகளும் எனக்கு தோட்டக்கலைதுறையின் அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்டது. ஊடுபயிராக இருந்த மிளகாய் நடவு செய்த 45 நாட்களில் எனக்கு மகசூலுக்கு தயாராகிவிட்டது. ஊடுபயிர் மூலம் 8 டன் பச்சைமிளகாய் கிடைத்தது. அதற்கு பிறகு முதன்மை பயிரான பப்பாளியும் எனக்கு அறுவடைக்கு தயாராகிவிட்டது. முதல் பறிப்பில் 1500 kg கிடைத்துள்ளது. இதனை நான் கிலோ ரூ-7/-க்கு விற்பனை செய்தேன்.

பப்பாளி மற்றும் மிளகாய் பயிரிட்டதில் நான் ரூ-59,500/- செலவு செய்தேன். பப்பாளி உடன் மிளகாயினை ஊடுபயிர் செய்ததன் மூலம் மிளகாய் பயிரிலிருந்து எனக்கு நிகரலாபம் ரூ-39,500/-முதல் வருடத்திற்கு கிடைத்துள்ளது.



| வ. எண் | பறிப்பு | எடை | விலை | மொத்த மதிப்பு |
|---|---|---|---|---|
| 1. | முதல் பறிப்பு | 1500 | 7.00 | 10500 |
| 2. | இரண்டாம் பறிப்பு | 1800 | 8.00 | 14400 |
| 3. | மூன்றாம் பறிப்பு | 1650 | 9.50 | 15675 |
| 4. | நான்காம் பறிப்பு | 1900 | 9.25 | 17575 |
| | | | **மொத்தம்** | **58150** |

பப்பாளியில் மொத்தம் 15 பறிப்புகள் பறிக்கப்பட்டது. ஆகமொத்தம் 15 பறிப்புகளிலிருந்து 38டன் பப்பாளி மகசூல் கிடைத்தது. இதனை விற்பனை செய்ததன் மூலம் எனக்கு ரூபாய் ரூ.3,80,000/-கிடைத்தது. பப்பாளி மற்றும் மிளகாய் பயிரிட்டதில் செலவுரூ.59,500/-போக நிகரலாபம் ரூ.360000 கிடைத்தது. ஆகவே பப்பாளியுடன் காய்கறி பயிரினை ஊடுபயிர் செய்து வருடம் முழுவதும் எனக்கு லாபகரமானதாகவே இருந்தது.

## நீலவானம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், கல்லல்

சிவகங்கை மாவட்டத்தில், தேவகோட்டை மற்றும் கண்ணங்குடி வட்டாரங்களில் உள்ள 1000 விவசாயிகளை பங்குதாரர்களாக கொண்டு நீலவானம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டு 2019-20ம் ஆண்டு முதல் தேவகோட்டை வட்டாரத்தை தலைமையிடமாக கொண்டு வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

இந்த நிறுவனத்திற்கு வேளாண் வணிகத் துறையின் தமிழ்நாடு சிறுவிவசாயிகள் வேளாண் வணிக கூட்டமைப்பு (TNSFAC) மூலம் 2வருடத்திற்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் தலைமைசெயல் அலுவலர் சம்பளம், நிறுவனத்திற்குரிய வாடகை, மின்கட்டணம், கணிணி தளவாடப் பொருட்கள்,பயிற்சிகள் கண்டுணர்வு சுற்றுலாக்கள் மற்றும் ஆதாரநிறுவனத்தின் நிர்வாக செலவு ஆகியவை மூலம் ரூ.20 இலட்சம் வரை நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் நிறுவனத்தின் பங்குதாரர்களான மகளிர் உறுப்பினர்களுக்கு வேளாண் அறிவியல் நிலையம் குன்றக்குடி அவர்களின் மூலம் சிறுதானியத்தில் மதிப்பு கூட்டல் பயிற்சி அளிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியரால் ரூ.30000/- சுழல் நிதி வழங்கப்பட்டு கம்பு லட்டு, ராகி மிக்சர் சத்து மாவு போன்றவை தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. நெல் கொள்முதல் மற்றும் விற்பனை மூலம் ரூ.10.45 லட்சம் வரை வணிகம் செய்யப்பட்டுள்ளது.

வேளாண் பொறியியல் துறை மூலம் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் மதிப்புகூட்டு எண்ணெய் செக்கு இயந்திரங்கள், மாட்டுதீவனம் அரைக்கும் இயந்திரம் மற்றும் சிறுதானிய மற்றும் பயறு மதிப்பு கூட்டு இயந்திரம் ரூ.10 இலட்சம் மதிப்பிலும் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர விதை விற்பனை உரிமம் பெறப்பட்டு 2021 ஆண்டு முதல் நெல் விதை விற்பனை மையம் செயல்பட்டு வருகிறது. நடப்பு சம்பா பருவத்தில் ரூ.10.5 லட்சம்- மதிப்பில் நெல் விதைகள் RNR மற்றும் JGL ஆகிய இரகங்கள் (1080 மூடைகள்) விற்பனை செய்யப்பட்டு ரூ.55000/- வரையிலும் லாபம் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த ஆண்டு பூச்சிமருந்து உரிமம் மற்றும் உரஉரிமம் பெறப்பட்டு விற்பனை துவங்க உள்ளது. உற்பத்தியாளர் நிறுவனத்தின் பங்குதாரர்களான விவசாயிகள் மற்றும் வட்டாரத்தை சார்ந்த மற்ற விவசாயிகளும்

நல்லதரமான விதைகளை பெற்று பயனடைந்து வருகின்றனர்.

**சிறுதானியத்தில் மதிப்பு கூட்டல்-சுழல் நிதி வழங்குதல்**



**எதிர்கால திட்டம்:**

- உரவிற்பனை மற்றும் பூச்சி மருந்து விற்பனை ஆகியவற்றை விவசாயிகள் பயன்பெறும் வகையில் நடத்தவும் மதிப்பு கூட்டுமையத்தை லாபகரமான முறையில் நடத்தவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

  விவசாயிகளை இயற்கை முறையில் சாகுபடி(நெல், சிறுதானியம்) செய்ய ஊக்குவித்தல் மற்றும் கொள்முதல் செய்வது.
- காளான் சாகுபடி செய்து விற்பனை.
- காடை வளர்ப்பு மையம் துவங்குதல்.

தொடர்புக்கு,
திரு.விக்னேஸ்வரன்,
முதன்மை செயல் அலுவலர்,
செல்:8220218195

---

# செம்மை நெல் சாகுபடி

தமிழக வேளாண்மையில் நெல் சாகுபடி ஒரு முக்கிய அங்கமாகும். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் 28 இலட்சம் எக்டரில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. ஆனால் தற்போது 21 இலட்சம் எக்டரில் மட்டும் தான் செய்யப்பட்டு வருகிறது. இருந்தாலும் நெல் உற்பத்தித்திறனில் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடு முன்னிலையிலும் பஞ்சாப் மாநிலத்திற்கு அடுத்தபடியாகவும் உள்ளது. கடந்த சில வருடங்களாக மொத்த ஆண்டு நெல் உற்பத்தி ஒரு தேக்க நிலையில் (80 இலட்சம் டன்கள்) இருந்து வருகிறது. மக்கட் தொகை தொடர்ந்து பெருகி வருவதால், நெல் உற்பத்தித் திறனை மேலும் அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

நெல் சாகுபடியில் மற்றொரு கவலைக்குரிய நிலை சாகுபடிக்குத் தேவையான நீரின் அளவு குறைந்து பற்றாக்குறை இருப்பது தான்.

ஆகையால் நெல் சாகுபடியில் தற்போதைய தேவை, குறைந்த நீரில் அதிக உற்பத்தித் திறன் கொடுக்கக் கூடிய தொழில்நுட்பம். இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வது தான் செம்மை நெல் சாகுபடி முறை.

செம்மை நெல் சாகுபடியின் மூலம், மடகாஸ்கர் நாட்டில் ஹென்றி டி லயானே என்ற கிறித்தவ பாதிரியாரால் உருவாக்கப்பட்டது ஆகும். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்ட செம்மை நெல் சாகுபடி முறை 2000 ஆண்டு தான் நமக்குத் தெரிய வந்தது.

செம்மை நெல் சாகுபடியென்பது, 14 வயது ஒற்றை நாற்றை 25 ஒ 25 செ.மீ. இடைவெளியில் நட்டு, மண் ஈரமாக இருக்குமளவுக்கு மட்டும் நீர் பாய்ச்சி, செடிகளுக்கிடையே களைக்கருவியை உபயோகிப்பதாகும். இந்த கோட்பாடுகள் நடைமுறை சாகுபடி சிபாரிசுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். ஆனால் இந்த சாகுபடி முறையினால் மகசூல் அதிகரிப்பது மட்டுமல்லாமல் வேறு பல நன்மைகளும் விவசாயிகளுக்கு கிடைக்கிறது.

எனவே, செம்மை நெல் சாகுபடி கோட்பாடுகள் பற்றி அறிந்து கொள்வது முக்கியமானதாகும். அப்போது தான் அவற்றை ஏன் கடைபிடிக்க வேண்டும் என்பது விளங்கும்.

**இளநாற்று**

சாதாரணமாக சிபாரிசு செய்யப்படும் 21-28 வயது நாட்களை விட குறைவான14 வயது நாற்றுகளை ஏன் நட வேண்டும் ? ஏனென்றால், இளநாற்றின் வீரியம் 21-28 வயது நாற்றுகளை விட அதிகமாக இருக்கும். அதிக இடைவெளியில் ஒற்றை நாற்று இருபத்தைந்து செ.மீ. இடைவெளியில் ஒற்றை நாற்றை நடும் போது ஒரு சதுர மீட்டரில் 16 நாற்றுகள் மட்டுமே இருக்கும். இதனால் ஒவ்வொரு நாற்றும் சூரிய வெளிச்சத்திற்கும் நுண்ணூட்டச் சத்துக்களுக்கும் மற்ற செடிகளுடன் போட்டியிட அவசியமில்லாத சூழ்நிலையில் உடனே பச்சை பிடித்து தூர் விடத் தொடங்கும்.

இடைவெளி விட்டு நடவேண்டியதற்கான இன்னொரு காரணம் களைக்கருவியை உபயோகிக்க வேண்டியிருப்பதாகும்.

**நீர் பாசனம்**

ஐந்து செ.மீ. அளவுக்கு நீரை கட்டி பின் அது வடிந்த மறுநாள் 5 செ.மீ. நீர் கட்டும் சிபாரிசுதான் தற்போது உள்ளது. ஆனால் விவசாயிகள் இந்த சிபாரிசைக் கடைப்பிடிக்காமல் நெல் வயலில் எப்போதும் அதிகமாக நீரைத் தேக்கி வைப்பார்கள். களைகளைக் கட்டுப்படுத்தத்தான் இந்த முறையை கடைப்பிடிக்கிறார்கள்.

மண் ஈரமாக இருக்கும் அளவு மட்டும் நீர் நிர்வாகம் இருந்தால் போதும் என்பது செம்மை நெல் சாகுபடி கோட்பாடாகும். ஏனென்றால், அல்லி போல நெல் நீர் வாழ் தாவரமல்ல. மற்ற செடிகளைப் போல் தேவையான நீர் மண்ணில் இருந்தால் போதும். ஒரு கிலோ நெல் உற்பத்தி செய்வதற்கு சுமார் 3000 லிட்டர் விரயமாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இதில் பாதியளவு நீரைக் கொண்டே நெல் சாகுபடி செய்து அதிக மகசூல் பெற முடியும்.

செம்மை நெல் சாகுபடிக்கான சரியான நீர் நிர்வாகம், 2.5 செ.மீ. நீரைப் பாய்ச்சி, அந்த நீர் நிலத்தில் வடிந்து பின் இலேசான கீறல்கள் தோன்றியபின் மீண்டும் 2.5 செ.மீ. கட்ட வேண்டும். இந்த முறையை பஞ்சு கட்டும் அல்லது தண்டு உருளும் பருவம் வரை கடைப்பிடிக்க வேண்டும். அதன் பின் அதே அளவு நீரை நிலத்தில் நீர் மறைந்த உடனேயே கட்ட வேண்டும். இந்த முறையை கடைப் பிடிப்பதால் 40 முதல் 50 சதவீதம் நீர் குறைவாக உபயோகமாகும்.

**களைக்கருவி உபயோகித்தல்**

செம்மை நெல் சாகுபடி கோட்பாடுகளில் முதன்மையானது களைக்கருவி உபயோகிப்பதாகும். செம்மை நெல் சாகுபடி முறையில், களைக்கருவியை உபயோகிக்காவிட்டால் அது செம்மை நெல் சாகுபடியல்ல என்றே சொல்லலாம்.

களைக்கருவி கோனோ வீடர் மற்றும் ரோட்டரி வீடர் எனும் இரு வடிவங்களில் கிடைக்கிறது. கோனோ வீடரை ஆண்கள் மட்டும் இயக்க முடியும். ரோட்டரி வீடர் குறைந்த எடையுடன் இருப்பதால் பெண்களும் இயக்கலாம். களைக்கருவியை செடிகளுக்கிடையே குறுக்கும் நெடுக்குமாக நட்ட 10-12ம் நாள், 21-22ம் நாள், 30-32 ம் நாள் மற்றும் 40-42 ம் நாள் ஆக நான்கு முறை இயக்க வேண்டும். முதலாவது உபயோகம் நட்ட 10-12ம் நாளில் கட்டாயம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் களைக்கருவியால் ஏற்படும் முழுப்பயனையும் அடைய முடியாது. களைக்கருவி என்ற பெயரிலிருந்தாலும் இக்கருவியை உபயோகிப்பதால் களைகள் கட்டுப்படுத்தப்படுவது மட்டுமல்லாமல் பிற பல நன்மைகளும் கிடைக்கின்றன. பயிருக்கு இடப்படும் சத்துக்களை களைகளும் எடுத்துக் கொள்ளும். களைகள் களைக்கருவியால் மண்ணிலேயே அழுத்திவிடப் படுவதால் இந்தச் சத்துக்கள் மண்ணிற்கே திரும்புகின்றன. களைக்கருவி ஓடும்போது மண்ணில் காற்று கலந்து மண் புரட்டி விடப்படுவதால் நுண்ணுயிரிகளின் பணி

ஊக்குவிக்கப்படுவதோடு ஊட்டச்சத்துக்களின் அளவு அதிகமாகிறது. களைக்கருவி உபயோகிப்பதால் மட்டுமே மகசூல் அதிகரிக்கும்.

திருந்திய நெல் சாகுபடி
வரிசை நடவு
விதைப் பண்ணை
திரு. அசல்ராஜா /முத்தையா.
ஏ. ஆர். உசிலம்பட்டி
ரகம்: ADT 51..



**செம்மை நெல் சாகுபடியால் ஏற்படும் நன்மைகள்**

- ✓ செம்மை நெல் சாகுபடி செய்யும் விவசாயிக்கு பலவித நன்மைகள் கிடைக்கின்றன.
- ✓ நாற்றங்கால் பரப்பு (ஒரு எக்டர் நடவுக்கு) 800 சதுர மீட்டரிலிருந்து 100 சதுர மீட்டராகக் குறைவு
- ✓ விதைத் தேவை 30-60 கிலோவிலிருந்து 7.5 கிலோவாகக் குறைவு நாற்றங்கால் பராமரிப்பு 25-30 நாட்களிலிருந்து 14 நாட்களாகக் குறைவு நாற்றங்கால் செலவு 68 சதவீதம் குறைவு நாற்று பறிக்கும் செலவு 800 ரூபாயிலிருந்து 150 ரூபாயாகக் குறைவு நடவுக்கான ஆட்கள் தேவை 60 லிருந்து 35 ஆகக் குறைவு களை எடுக்கும் ஆட்கள் தேவை 50 சதவீதம் குறைவு பாசன நீர் 30-40 சதவீதம் குறைவதோடு, மின்சார உபயோகம் மற்றும் ஆட்கள் செலவும் குறைகிறது செம்மை சாகுபடி பயிர் சாய்வதில்லை, எலித்தொல்லை இல்லை தானிய மகசூல் சராசரியாக எக்டருக்கு 1.5 மண் அதிகரிப்பு வைக்கோல் மகசூல் 2.6 டன் அதிகரிப்பு 100 லிருந்து 200 சதவீதம் வரை அதிக இலாபம் கடலோர உவர் மண்ணிலும் நல்ல மகசூல்.

**செம்மை நெல் சாகுபடிக்கான சில முக்கிய குறிப்புகள்**

1. செம்மை நெல் சாகுபடியை ஒரு முறை செய்து பார்த்தால்தான் அதன் முக்கியத்துவம் தெரியும். அதனால் ஒரு சிறிய இடத்திலாவது நம்பிக்கையுடன் செய்து பார்க்க வேண்டும்.

2. நடவு வயலிலேயே நாற்றங்காலை அமைத்துக் கொள்வது நல்லது.

3. நாற்றுகளை பறித்த சிறிது நேரத்திலேயே நட்டு விட வேண்டும்.

4. முதன்முறை சதுர நடவு செய்யும் நடவு ஆட்களுக்குத் தயக்கம் இருக்கும். அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

5. செம்மை நீர் நிர்வாகத்தைக் கடைப்பிடிக்க முடியாத இடங்களிலும் மற்ற கோட்பாடுகளைக் கடைப்பிடித்து அதிக மகசூல் பெறலாம்.

6. இயற்கை உரங்கள் இடும்போது செம்மை நெல் சாகுபடியில் மேலும் அதிக பயன் கிடைக்கிறது.

7. தங்கள் வயலிலேயே தழை உரம் நிரந்தரமாக கிடைக்க விவசாயிகள் சீமை அகத்தியை (கிளைரிசிடியா) வரப்புகளில் வளர்க்க வேண்டும்.

8. ஆர்வமும் ஈடுபாடும் உள்ள விவசாயிகளால் மட்டுமே செம்மை நெல் சாகுபடியின் பலன்களை பெற முடியும்.

9. செம்மை நெல் சாகுபடியில் அதிக தழைச்சத்து எடுத்துக் கொள்வதால் பயிர் எப்போதும் நல்ல பச்சை நிறத்துடன் இருக்கும். தழைச்சத்து

*கவனமாக உபயோகிக்காவிட்டால் பூச்சித்தொல்லை இருக்கும்.*

*10. செம்மை நெல் சாகுபடி முறை மண்ணில் நுண்ணுயிர் செயல்பாட்டை ஊக்குவிக்கிறது.*

*11. தானியங்கி களைக்கருவியை உருவாக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. இது கிடைத்து விட்டால் செம்மை நெல் சாகுபடி மேலும் இலகுவாகும்.*

தொடர்புக்கு:
முனைவர்.குருசாமி, தலைவர் மற்றும் பேராசிரியர், மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், செட்டிநாடு
செல்:9443973236

---

## வேளாண் பொறியியல் துறை மூலம் வருவாய் பெறலாம்

சிவகங்கை மாவட்டம்,காளையார் கோவில் வட்டாரத்தில்,சிலந்தங்குடி வருவாய் கிராமத்தில் வசித்து வருகின்ற அழகர், த/பெ.காட்டுராஜராமன் (செல்:8098349656) ஆகிய எனக்கு சுமார் 4 ½ ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. அதில் விவசாயம் செய்து வருகிறேன். போதுமான மழை இல்லாததாலும் ஆழ்குழாய் கிணற்றில் விவசாயத்திற்கு தேவையான நீர் இல்லாததாலும் நீர் ஆதாரத்தை பெறுக்குவதற்காக வேளாண்மைப் பொறியியல் துறையினை அணுகிய போது MSDA திட்டத்தின் மூலமாக பண்ணைக் குட்டை அமைத்து தருவதாக தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, உதவி செயற் பொறியாளர், சிவகங்கை அலுவலகத்தில் எனது விவசாய நிலத்தில் சர்வே எண் 61/1 ல் பண்ணை குட்டை அமைக்க மனு கொடுத்திருந்தேன். உதவி செயற் பொறியாளர் (வே.பொ) அலுவலகத்திலிருந்து நிலத்தை நேரடியாக பார்வையிட்டு 2019-20 ஆம் ஆண்டு MSDA திட்டத்தில் 38.25X19.25X1.80m என்ற பரப்பளவில் பண்ணைக்குட்டை அமைத்து கொடுத்தார்கள்.

பண்ணைக்குட்டை அமைப்பதற்கு முன்பாக சுமார் 2 ½ ஏக்கரில் மட்டும் ஆழ்குழாய கிணறு மூலமாக நீர் பற்றாக் குறையுடன் காய்கறி, வாழை மற்றும் பயறு வகைகளை விவசாயம் செய்து வந்தேன். தற்போது பண்ணைக் குட்டை அமைக்கப்பட்டு வேளாண்மைப் பொறியியல் துறையின் ஆலோசனையின்படி, நுண்ணீர் பாசன திட்டத்தின் மூலம் 4 ½ ஏக்கரில் காய்கறி, பழமரங்கள், கரும்பு, நெல், வாழை மற்றும் பயறு வகைகளை விவசாயம் செய்து வருகிறேன். இதன் விளைவாக முன்பு இருந்ததை விட விவசாயம் செய்ய நீர் ஆதாரம் போதிய அளவு கிடைப்பதால் தற்போது அதிக மகசூல் கிடைக்கப்பெற்று இலாபம் அடைந்து வருகிறேன்.

மேலும் பண்ணைக் குட்டையில் மீன் வளர்த்து அதன்மூலம் நல்ல பலனையும் பெற்று வருகிறேன் என்பதனையும் பண்ணைக்குட்டை அமைத்து கொடுத்த வேளாண்மைப் பொறியியல் துறைக்கு எனது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.




---

**<u>மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சிவகங்கைமாவட்டத்தில் மீன்வளர்ப்பினால் முன்னேற்றமடைந்த மீனவர் - ஓர் பார்வை</u>**

சிவகங்கை மாவட்டம்,V.புதுக்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு.சங்கரன், த/பெ.பெரியகருப்பன் (செல்:9843693609) என்பவர் சிறிய பண்ணைக்குட்டை அமைத்து மீன் வளர்ப்பினை துவக்கினார். பின்னர் பண்ணைக்குட்டையினை மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் பதிவு செய்துள்ளார். அதன்பிறகு 2019-20ம் ஆண்டு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை தொழில்நுட்ப உதவியுடன் நீர்வள நிலவளத்திட்டத்தில் உப்பாறு உபவடிநிலப்பகுதிகளில் கிப்ட் திலேப்பியா மீன்குஞ்சுகள் மற்றும் மீன்தீவனம் மானியத்தினை பெற்று இதன் மூலம் ஈட்டப்பட்ட வருவாயினை கொண்டு மற்றொரு பண்ணைக்குட்டை அமைத்து மீன்வளர்ப்பு பணியினை சிறப்பாக மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டம் -II (TN-IAMP) கீழ் முதல் மற்றும் இரண்டாம் கட்ட உப்பாறு உபவடி நிலப்பகுதிகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அலுவலகத்தில் அளிக்கப்பட்டதில் கலந்துகொண்டு மீன்வளப் பயிற்சியினை பெற்று மீன்வளர்ப்பு சிறப்பாக மேற்கொண்டுவருகிறார்.

மேலும் மீன்பிடிப்பு பணியில் ஈடுபட்டு மீன்களை விநியோகம் செய்து வாழ்வாதாரத்தை படிப்படியாக உயர்த்தி வருகிறார்.





## வேளாண்மை இயக்குநர், சமிதி, குடுமியான்மலை

## <u>இயற்கை முறை காட்டுப்பன்றி விரட்டி</u>

தமிழ்நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் காட்டுப்பன்றிகளின் நடமாட்டம் பெருகியுள்ளதால் விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைகின்றனர். காட்டுப்பன்றிகள் அனைத்து பயிர்களையும் அதாவது நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள், நிலக்கடலை, சூரியகாந்தி, கரும்பு, வாழை, கத்திரி உள்ளிட்ட பல்வேறு பயிர்களில் நுழைந்து மிகுந்த சேதம் ஏற்படுத்துகின்றன. பெரும்பாலும் இவற்றின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த முள்வேலி, மின்சாரவேலி, வண்ணத்துணிகள் ஆகியவற்றை வயலைச் சுற்றி கட்டுதல் மற்றும் பல்வேறு இரசாயன மருந்துகள் பயன்படுத்தி தோல்வி அடைந்துள்ளனர். எனவே இவற்றை கருத்தில் கொண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் வேலூர் மாவட்டத்தில் இயங்கி வரும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், விரிஞ்சிபுரம் மூலம் ஆராய்ச்சிகள் மேற்கொண்டு காட்டுப்பன்றியை உயிரியல் முறை விரட்டியை உருவாக்கியுள்ளது. இந்த விரட்டியின் செயல்

திறன் குறைந்தது 3 மாதங்கள் வரையும் தடுக்கும் எனவும் ஆய்வு முடிவுகள் கூறுகின்றன.

**பயன்படுத்தும் முறைகள்:**

1. ஒரு ஏக்கருக்கு தாவர காட்டுப்பன்றி விரட்டி 500மிலி தேவைப்படுகிறது.
2. பயிர் செய்திருக்கும் நிலத்தைச் சுற்றி வரப்பு பகுதிகளில் இரண்டடி உயரம் குச்சிகளை 10 அடி இடைவெளியில் ஊன்றி 1-1 1/2 அடி உயரத்தில் கட்டு கம்பி கொண்டு இணைத்து கட்ட வேண்டும்.
3. இந்த குச்சிகளின் இருபுறமும் குறைந்தது இரண்டு அடிகளுக்கு களைச்செடிகள் இல்லாமல் இருக்க வேண்டும்.
4. ஒவ்வொரு டப்பாவிலும் மூடிக்கு கீழ் நான்கு துளைகளை இட வேண்டும்.
5. ஒவ்வொரு டப்பாவிலும் சுமார் 5மிலி அளவு மருந்தினை ஊற்றி மூட வேண்டும். பின்பு நான்கு துளைகளில் எதிர் எதிர் திசைகளில் உள்ள இரண்டு துளைகளை நூல் கொண்டு இணைத்து டப்பாவை மூடி முடிச்சுப் போட வேண்டும். மேலும் இந்த நூல் மூலமாக வயலை சுற்றியுள்ள கம்பியில் கட்டி டப்பாக்களை நேராக தொங்க விட வேண்டும்.
6. டப்பாவை சாய்வாக இல்லாமல் கட்ட வேண்டும். வாசனை மெதுவாக வெளியேற்றப்பட்டு காட்டுப்பன்றிகள் வராமல் குறைந்தது மூன்று மாதம் வரை தடுக்கும்.



எனவே தாவர காட்டுப்பன்றி விரட்டி தேவைப்படும் விவசாயிகள், விரிஞ்சிபுரம், வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் அவர்களை தொலைபேசி மூலமாக (0416 2900242) (அ) நேரிலோ (அ) மின்னஞ்சல் (arsvrm@tnau.ac.in) மூலமாகவும் தொடர்பு கொண்டு காட்டுப்பன்றி விரட்டியைப் பெற்று பயன்பெறலாம். ஒரு லிட்டரின் விலை ரூ.590 ரூபாய் நேரில் வர இயலாதவர்கள் 700ரூபாய் இணைய வங்கி மூலம் செலுத்தி தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

## தென்னையில் சிவப்புக் கூன் வண்டுகளைக் கட்டுப்படுத்தும் முறைகள்

"கற்பக விருட்சம்" என்று அழைக்கப்படும் தென்னையானது உலக அளவில் 108 நாடுகளில் பயிரிடப்பட்டுள்ளது. தென்னையானது தோட்டங்களில் மட்டுமல்லாமல் நகர்ப்புறங்களில் அனைவரது வீடுகளிலும் இளநீருக்காகவும், தேங்காய்க்காகவும் வளர்க்கப்படுகிறது. தென்னையில் மகசூல் குறைவதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும், மிக முக்கியமான காரணம் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் ஆகும். தென்னையில் மகசூலைக் குறைப்பதில் தென்னை விவசாயிகளுக்கு மிகவும் சவாலாக இருப்பது சிவப்புக் கூன் வண்டாகும்.

### சிவப்புக் கூன் வண்டு

சிவப்புக் கூன் வண்டானது தென்னை பயிரிடப்படும் இடங்களான கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு, அசாம் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் அதிக அளவு சேதத்தினை ஏற்படுத்துகின்றன. இவ்வண்டானது எல்லா வயதுடைய தென்னை மரங்களையும் தாக்கும்

என்றாலும், இளம் வயதுடைய தென்னை மரங்கள், முதல் இருபது வயதுடைய மரங்களையே அதிகமாகத் தாக்குகின்றன. இதன் தாக்குதலானது காண்டாமிருக வண்டு மற்றும் குருத்தழுகல் நோய்த் தாக்கிய மரங்களில் அதிகமாகக் காணப்படும். மேலும், இடி விழுந்து பராமரிப்பு இல்லாமல் காய்ந்து போன தென்னை மரங்களில் இவை இனப்பெருக்கம் செய்யும்.

**<u>சேத அறிகுறிகள்</u>**

தாய் வண்டானது முட்டைகளை மரத்தின் தண்டில் உள்ள வெடிப்புகளிலோ அல்லது காயங்களிலோ இடுகின்றன. முட்டைகளில் இருந்து வெளிவரும் புழுவானது குருத்து மற்றும் தண்டுப் பகுதியில் உள்ள மிக மென்மையான திசுக்களைத் தின்று சக்கைகளைத் துவாரத்தின் வழியே வெளியே தள்ளுகின்றன. பாதிக்கப்பட்ட மரத்துவாரத்தின் வழியே பழுப்பு நிறத் திரவமானது வெளியே வந்து கொண்டிருக்கும். தாக்கப்பட்ட மரத்தின் பகுதிகளில் துர்நாற்றம் வீசும். மரத்தின் தண்டுப் பகுதியில் காது வைத்துக் கேட்டால் புழுவானது கடித்துத் தின்னும் சத்தம் கேட்கும். இவை தென்னை மரத்தைத் தவிர பனை மரத்தையும் தாக்கவல்லது.

**<u>வாழ்க்கைப் பருவம்</u>**

வண்டானது பழுப்பு நிறம் கலந்த சிவப்பாகவும், முதுகு பகுதியில் ஆறு கருப்பு நிற புள்ளிகளையும் கொண்டிருக்கும். இவை மரத்தில் உள்ள காயங்களிலோ அல்லது துளைகளிலோ முட்டைகளை இடுகின்றன. புழுவானது வெளிறிய மஞ்சள் நிற உடம்புடனும், சிவப்பு நிற தலையுடனும் கால்கள் இல்லாமல் காணப்படும். புழுப்பருவமானது 36 முதல் 78 நாட்களைக் கொண்டது. இவற்றின் மொத்த ஆயுட்காலம் 4 மாதங்கள் ஆகும்.

**<u>மேலாண்மை முறைகள்</u>**

- தோப்புகளில் இடி விழுந்த பராமரிப்பு இல்லாமல் காய்ந்து போன மரங்களை வேரோடு அப்புறப்படுத்தி அழிக்க வேண்டும்.
- மரங்களில் காயம் எதுவும் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.
- தண்டுப்பகுதியில் துளைகள் இருப்பின் அவற்றினை சிமெண்ட் கலவை கொண்டு மூட வேண்டும்.
- பச்சை மட்டைகள் வெட்டுவதைத் தவிர்க்க வேண்டும். அப்படி வெட்டுவதாயின் தண்டிலிருந்து 120 செ.மீ தள்ளி வெட்ட வேண்டும்.
- நுனி, நடுக்குருத்து மற்றும் மட்டை இடுக்குகளில் வேப்பங்கொட்டைத் தூள் + மணல் (1:2) கலந்த கலவையை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வைப்பதினால் காண்டாமிருக வண்டு தாக்கிய இடங்களில் சிவப்புக் கூன் வண்டு முட்டையிடுவதையும் தடுக்கலாம்.
- இரண்டு ஹெக்டேருக்கு ஒரு இனகவர்ச்சிப் பொறியினை வைத்து கூன் வண்டுகளைக் கவர்ந்து அழிக்கலாம்.
- கரும்பு மொலாசஸ் 2 1/2 கிலோ + ஈஸ்ட் 5 கிராம் + அசிடிக் அமிலம் 5 மி.லி போன்றவற்றுடன் நீளவாக்கில் வெட்டப்பட்ட இளம் மட்டைத் தண்டுகள் போடப்பட்ட பானைகளை ஏக்கருக்கு 30 வீதம் தோப்பில் வைத்து வண்டுகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

## வறண்ட நிலப் பண்ணையத்தில் நீர் சேமிப்பு முறைகள்

நம் மாநிலத்தில் சுமார் 20 இலட்சம் எக்கடர் நிலங்களில் மானாவாரி சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. எனவே, தற்போது பெய்யத் தொடங்கி உள்ள வடகிழக்குப் பருவமழையினை கீழ்கண்ட நீர் பாதுகாப்பு முறைகளை் கடைபிடித்து வறண்ட நிலப் பண்ணையத்தில் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**1) செம்மைப்படுத்தப்பட்ட சிறு நீர்ப்பிடிப்பு பகுதி**

இது மண்ணினுள் ஈரப்பதத்தை பாதுகாக்கவும், மண் இழப்பைக் குறைக்கவும் செய்கிறது. நீர் உட்புகும் திறன் மற்றும் மழையளவைப் பொறுத்து சமமட்டப் பகுதிகளில் ஒரு மீட்டர் விட்டம் கொண்ட வட்டப்பாத்தி அமைக்க வேண்டும். மழையளவு மற்றும் சரிவான நிலங்களில் சரிவைப் பொறுத்து 5மீ x 5மீ அளவுடைய 'V' வடிவப் பள்ளங்கள் தோண்டி, அதில் நடுவில் மரங்களை நடவேண்டும். சரிவிற்கு குறுக்கே 15 – 20 செ.மீ. உயரம் மற்றும் 2 மீ விட்டமுடைய கிண்ண வடிவ பாத்திகள், அரைவட்ட வரப்புகளை அமைக்க வேண்டும். நிலத்தின் சாய்வுத் தன்மை, பயிரின் நீர்த்தேவை, தண்ணீர் பாயும் வேகம் மற்றும் செடியின் கிளைகள் ஆகியற்றைப் பொறுத்து சிறு நீர்ப்பிடிப்பு படுக்கையை உருவாக்கலாம்.

**2) அரை நிலவு வடிவ வரப்புகள்**

நீர் பாயும் வேகத்தையும் வழிந்தோடுவதையும் தடுப்பதற்கு சுமார் 18-45 அடி சுற்றளவுள்ள அரை நிலவு வடிவுள்ள வரப்புகளை உருவாக்க வேண்டும். குழியில் நடுமையத்தில் செடிகளை நடவு செய்யவும்.

**3) சமன்படுத்தப்பட்ட வரப்புகள்**

நிலத்தின் சாய்வுத் தன்மையைப் பொறுத்து அடுக்கு அல்லது படிகட்டு போன்ற அமைப்புகளை பொருத்தமான அகலம் மற்றும் உயரத்தில் கட்டலாம். இத்தகைய படிகட்டுகள் நீரைத் தேக்கிவைத்து அனைத்து பகுதிகளிலும் ஒரே அளவான நீர் உட்புகும் திறனை ஏற்படுத்துகின்றது.

**4) அகலப்பாத்தி மற்றும் சால்கள் அமைத்தல்**

மழைக்காலங்களின் போது மண் அரிப்பைக் கட்டுப்படுத்தவும், மண் ஈரப்பதத்தை பாதுகாக்கவும வயல் எல்லைகளுக்குள்ளே அகலப்பாத்திகள் மற்றும் சால்கள் அமைக்க வேண்டும். நிலத்தைச் சமப்படுத்தி, டிராக்டர் கொண்டு பார்கள் அமைக்க வேண்டும்.

**5) சம உயர வரப்பு**

சரிவிற்கு குறுக்கே வரப்பு அமைப்பதால் வழிந்தோடும் நீரைத் தடுக்கலாம். இது நீர் வழிந்தோடும் வேகத்தைக் கட்டுப்படுத்த உதவுகிறது. வரப்புகள் திறந்தவெளி (அ) மூடியவாறு இருக்கலாம். தேவைப்படும்போது அதிகப்படியான அமைப்புகளும் அமைக்கலாம்.

**குறுக்கு வெட்டாக உள்ள வரப்புகளுக்கான அளவீடுகள் :**

| | அடி அகலம் (மீ) | மேல் அகலம் (மீ) | உயரம் (மீ) | பக்கச் சரிவு (மீ) | குறுக்கு வெட்டுப் பகுதி (ச.மீ.) |
|---|---|---|---|---|---|
| ஆழம் குறைவான மண்கள் (7.5 – 22.5 செ.மீ.) | 2.67 | 0.38 | 0.75 | 1.5:1 | 1.14 |
| நடுத்தர மண் (22.5 – 45 செ.மீ.) | 3.12 | 0.60 | 0.85 | 1.5:1 | 1.56 |
| நடுத்தர ஆழமுள்ள மண் | 4.25 | 0.60 | 0.90 | 2:1 | 2.18 |

**பலதரப்பட்ட வரப்புகளுக்கு தேவைப்படும் அளவீடுகள்**

| வரப்புகள் | மண்வகை | மழையளவு (மி.மீ.) | சரிவு (%) |
|---|---|---|---|
| சம உயர வரப்பு (Contour bund) | இளகிய மண் | <600 | > 1.5 |
| சீர் வரப்பு (Level bund) | அனைத்து மண் | >600 | 1.5 |
| இருக்கை அடுக்குத் தளம் (Compartmental bunding) | ஆழமான மண் | >1000 | 6.0 |
| சீர் வரப்பு வரிசை (Rows of bund / Staggered rows) | ஆழமான செம்மண் மற்றும் அதுசார்ந்த மண் | >800 | >1.5 |





**மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள்
தலைமையில் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்குதல்
இடம்: மாவட்ட ஆட்சியர் வளாகம், சிவகங்கை**



முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு
இயக்கம்
இடம் : வேப்பங்குளம்



வேளாண் பண்ணை இயந்திரங்கள்
பார்வையிடல்

வெளியீடு:
திட்ட இயக்குநர்/
வேளாண்மை இணை இயக்குநர்,
வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை(அட்மா)
சிவகங்கை மாவட்டம்